1986 மே 13]

வில்லிவாக்கம் ராஜாஜி நகரில் டிரான்ஸ்பார்மர் மாற்றுதல்

756.—(*வினா எண் 8423) திரு. வி. பி. சித்தன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

வில்லிவாக்கம் ராஜாஜி நகரில் புதிய டிரான்ஸ்பர்மரை வைக்கும் பணி எப்போது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : டிரான்ஸ்பார்மர் வைக்கும் கருத்துரு எதுவும் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 757 முதல் 759 வரை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்கள்

760—(*வினா எண். 3957) : திரு க. இரா. சின்னராசு : மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம் கிருட்டிணகிரி வட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஆம்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி வட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா என்று கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கிருஷ்ணகிரி வட்டத்தில் ஏற்கனவே ஒரு சிப்காட் தொழிலகம் ஏற்பாடு செய்து, அது நல்லமுறையில் வளர்ச்சி பெறாத நிலைமையில் இருக்கிறது. இப்போது அந்தப் பகுதி பல்வேறு வகைகளில் வறட்சிப் பகுதியாக இருக்கிறது. ஆகவே அதைப் பின் தங்கிய வட்டமாக அறிவித்து வளாகத்தில் எந்தெந்த வகையில் மேலும் அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் முயற்சிகள் செய்யப்பட்டு உள்ளன என்பதை அரசு அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே ஏ. பி.சி. என்ற மூன்று பிரிவுகளின் கீழ், இவைகளை எல்லாம், ஆராய்ந்து வருகிறோம். தற்போது கிருஷ்ணகிரி தாலுக்காவை பின்தங்கிய பகுதியாக அறிவிக்கலாமா என்று அரசு